# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1796/5 - 2013 පෙබරවාරි මස 05 වැනි අඟහරුවාදා - 2013.02.05

*1796/5 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### *2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டம்*

*2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.*

*நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,*
*நாணயச் சபையின் தலைவர் மற்றும்*
*இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்.*

*கொழும்பு,*
*2012, திசெம்பர் 28.*

*2012 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் (வட்டிவீதங்கள்) பணிப்புரை*

*1. இப்பணிப்புரை 2012 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (வட்டிவீதங்கள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நியதிகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடைத்தாதலும் வேண்டும்.* *எடுத்துக்காட்டல்.*

*2. 2.1 2013, சனவரி மாதம் 1 ஆந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட தவணை வைப்புக்களின் மீது நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்படத்தக்க ஆண்டு வட்டி வீதம் கீழே எடுத்துக்காட்டப்பட்டவாறு வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச மேலெல்லையினை விஞ்சக்கூடாது.* *தவணை வைப்புக்களுக் கான உயர்ந்த பட்ச வட்டி வீதம்.*

| *தவணை வைப்பு முதிர்ச்சிக் காலம்* | *வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச மேலெல்லை* | |
|---|---|---|
| *ஓராண்டு அல்லது அதற்கும் குறைவான* | *2012, திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் வழங்கப்பட்ட 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டு சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதம் (இதனகத்துப் பின்னர் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டவாறான காலாண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள்)* | *2.00 சதவீதப்புள்ளிகளைக் கூட்டியது* |
| *ஓராண்டிற்கு மேல் -3 ஆண்டுகள் வரை* | | *2.50 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது* |
| *3 ஆண்டுகளுக்கு மேல் - 5 ஆண்டுகள் வரை* | | *3.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது* |


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2.2 ஆளொருவரிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுமிடத்து அல்லது அவரால் புதுப்பிக்கப்படுமிடத்து அத்தகைய வைப்புக்களை அவர் மேற்கொள்ளும் அல்லது புதுப்பிக்கும் வேளையில் அவர் ஐம்பத்தைந்து (55)வயதிற்கு மேற்பட்டவராக இருப்பின் (இதனகத்துப் பின்னர் மூத்த பிரசை எனக் குறிப்பிடப்படுவார்) நிதிக் கம்பனியொன்று பந்தி (2.1) இல் குறிப்பிடப்பட்டவாறான வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச மேலெல்லைக்கு கூடுதலாக ஒரு சதவீதத்தினை விஞ்சாத வட்டியொன்றினை கூடுதலாகச் செலுத்தலாம்.

மாற்றல் செய்ய முடியாத வைப்புச் சான்றிதழுக் கான உயர்ந்த பட்சக் கழிவு வீதம்.

3. 2013, சனவரி 1 இற்குப் பின்னர் முதிர்ச்சியில் மீட்கத்தக்க பெறுமதியிலும் பார்க்க குறைவான விலைகளைக் கொண்ட மாற்றல் செய்ய முடியாத வைப்புச் சான்றிதழின் வழங்கல் மீது நிதிக் கம்பனியொன்றினால் அனுமதிக்கப்படக்கூடிய கழிவு வீதம் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள உயர்ந்தபட்ச விளைவினை விஞ்சக்கூடாது.

<table>
<tr><th>மாற்றல் செய்ய முடியாத வைப்புச் சான்றிதழ்களின் முதிர்ச்சிக் காலம்</th><th colspan="2">உயர்ந்தபட்ச ஆண்டு விளைவு</th></tr>
<tr><td>ஓராண்டு அல்லது அதற்கும் குறைவான</td><td rowspan="3">2012, திசெம்பர் 31 ஆம் நாளுடன் முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் வழங்கப்பட்ட 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டு சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதம் (இதனகத்துப் பின்னர் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டவாறான காலாண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள்)</td><td>2.00 சதவீதப்புள்ளிகளைக் கூட்டியது</td></tr>
<tr><td>ஓராண்டிற்கு மேல் -3 ஆண்டுகள் வரை</td><td>2.50 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது</td></tr>
<tr><td>3 ஆண்டுகளுக்கு மேல் - 5 ஆண்டுகள் வரை</td><td>3.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது</td></tr>
</table>

சேமிப்பு வைப்புகளுக் கான உயர்ந்த பட்ச வட்டி வீதம்.

4.4.1 எந்தவொரு சேமிப்பு வைப்பின் மீதும் நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்படத்தக்க உயர்ந்தபட்ச ஆண்டு வட்டி வீதங்கள் 2012, திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் வழங்கப்பட்ட 91 நாள் திறைசேரி உண்டியல்களின் நிறையேற்றப்பட்ட விளைவு வீதத்தினை விஞ்சக்கூடாது (இதனகத்துப் பின்னர் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டவாறான காலாண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள்).

4.2 சேமிப்பு வைப்புக்கள் மூத்த பிரசைகளினால் பேணப்படுகின்றவிடத்து நிதிக் கம்பனியானது, பந்தி (4.1) இல் உள்ளவாறு வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச மேல் எல்லைக்கு கூடுதலாக ஒரு சதவீதப் புள்ளியை விஞ்சாத மேலதிக வட்டி வீதமொன்றினைச் செலுத்தலாம்.

காலாண்டு நிறையேற்றப் பட்ட சராசரி விளைவு வீதம்.

5. பணிப்பாளர், மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 இல் முடிவடைகின்ற ஒவ்வொரு காலாண்டிற்கும் ஏற்புடைத்தான 91 மற்றும் 364 திறைசேரி உண்டியல்களின் காலாண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களை அறிவிப்பார்.

அறிக்கையிடல்.

6. ஒவ்வொரு நிதிக் கம்பனியும், அத்தகைய நிதிக் கம்பனியினால் மாற்ற முடியாத வைப்புச் சான்றிதழுக்கு பிரயோகிக்கத்தக்க, செலுத்தத்தக்க வட்டி வீதங்கள் மற்றும் கழிவு வீதங்களின் விபரங்களை அடுத்துவரும் மாதத்தின் 7 ஆம் திகதிக்கு முன்னதாக சமர்பித்தல் வேண்டும்.

வரைவிலக் கணம்.

7. இவ்வரைவிலக்கத்தில் -

7.1 "தவணை வைப்புக்கள்" என்பது குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மீள்கொடுப்பனவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிதிக் கம்பனியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் வைப்பு எனப் பொருள்படும்.

7.2 "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் என பொருள்படும்.

நீக்குதல்.

8. 2012.09.28 ஆந் திகதியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டிவீதம்) பணிப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

2-677

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.